மதுரையில் மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் சந்திப்பு– ஆலோசனைக் கூட்டம்:

200-க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெற இளைஞர் அணியினர் களத்தில் நின்று உழைத்திடுங்கள்!

மதுரையில் நடைபெற்ற இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில்

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சியுரை!

மதுரை,பிப்.16–

மதுரையில் மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் சந்திப்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் நேற்று, கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது.

அப்போது அவர் விருதுநகர் தென் மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு வெற்றிகரமாக நடைபெற உழைத்த நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்து, அவர்களுக்கு நினைவுப்பரிசுகளை வழங்கி குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். மேலும் விரைவில் நடைபெறவுள்ள மேற்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பிற்கான பணிகளை சீரிய முறையில் மேற்கொள்ளும்படி ஆலோசனைகள் வழங்கி எழுச்சி மிக்க உறையாற்றினார்.

அப்போது அவர், 2026 சட்டமன்றத் தேர்தலில் 200-க்கும் அதிகமான தொகுதிகளில் நாம் வெற்றி பெற வேண்டும். அதற்கு இளைஞர் அணி தம்பிமார்கள் நாம் களத்தில் நின்றாக வேண்டும். அதற்கு ஏற்ற மாதிரி உங்களின் பணிகளை அமைத்துக்கொள்ளுங்கள் என்று உங்கள் சகோதரனாகக் கேட்டுக்கொள்கிறேன்"என்று குறிப்பிட்டார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சிமிக்க உரை வருமாறு:

இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பின் வெற்றிக்காக உழைத்த, உங்கள் அனைவரையும் மதுரையில் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். சகோதரர் ராஜா அவர்களும், தங்கம் தென்னரசு அவர்களும் நிறையப் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். எப்படியெல்லாம் நம்முடைய நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியைத் திட்டமிட்டோம், அதற்கு எவ்வளவு முயற்சிகள் எடுத்துக்கொண்டோம் என்பதை அவர்கள் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். எனவே, நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை.

இளைஞர் அணி மட்டும்தான்

இன்று இந்தியாவிலேயே ஒரு கட்சியின், ஓர் இயக்கத்தின் ஓர் அணி, அந்த அணியின் உறுப்பினர்களில் வெறும் நிர்வாகிகளை மட்டும் லட்சக்கணக்கில் கூட்டி ஒரு சந்திப்பை நடத்துவது என்றால், அது தி.மு.க-வின் இளைஞர் அணி மட்டும்தான். அந்த சந்திப்பின்பொழுதே பல கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

நம்முடைய தெற்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு, நான் ஏற்கனவே சொன்னது போல கழகத்தின் இந்தத் தேர்தலில் நம்முடைய வெற்றித் தொடக்கத்தை (Winning Countdown) தொடங்கி வைத்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்தச் சந்திப்புக்கான ஏற்பாடுகளை எல்லாம் மிகச் சிறப்பாகச் செய்த, அதன் வெற்றிக்குத் துணை நின்ற நம்முடைய துணைச் செயலாளர்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதே போல அமைச்சர் அண்ணன் தங்கம் தென்னரசு அவர்களுக்கும், அண்ணன் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்களுக்கும், அண்ணன் மூர்த்தி அவர்களுக்கும், அண்ணன் தளபதி அவர்களுக்கும், அண்ணன் மணிமாறன் அவர்களுக்கும் மீண்டும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மண்டல நிர்வாகிகள் சந்திப்பு

திருவண்ணாமலையில் வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பை நடத்தினோம். அதன் பிறகு தெற்கு மண்டலத்தின் சந்திப்பை நடத்தினோம். ஒரு மண்டலத்தை இன்னொரு மண்டலம் மிஞ்சுகின்ற அளவுக்கு, திருவண்ணாமலையை மிஞ்சுகின்ற அளவுக்கு விருதுநகரில் அந்தச் சந்திப்பை நாம் நடத்திக் காட்டியிருக்கிறோம். இந்த வெற்றிக்கு முழு காரணம் யார் என்று கேட்டால், வந்திருக்கக்கூடிய நீங்கள்தான் காரணம். என்னுடைய குழு உறுப்பினர்களான நீங்கள்தான் முழுக்க முழுக்கக் காரணம்.

அறிவிப்பு வந்துவிட்டது. "திருவண்ணாமலை சந்திப்பு முடிந்த உடனே இன்னொரு சந்திப்பு நடத்த முடியுமா? தேர்தலுக்கு மிகவும் நெருக்கமாக இருக்குமே. கால அவகாசம் இருக்குமா?" என்று கேட்டபொழுது, "நிச்சயம் நடத்திக் காட்டலாம்" என்று துணைச் செயலாளர்கள் அத்தனை பேரும் அந்த நம்பிக்கையைக் கொடுத்தார்கள். உடனே, "எங்கே நடத்துவோம்?" என்ற கேள்வி வந்தது.

"தெற்கு மண்டலத்தில் நடத்துவோம்" என்று முடிவானது. சரி, தெற்கு மண்டலத்தில் எங்கே? அதில் பல போட்டிகள் நடந்தன: "எங்கள் மாவட்டத்தில் நடத்த வேண்டும்" என்று கோரிக்கைகள் வந்தன. தலைவர் அவர்கள் "விருதுநகரில் நடத்துங்கள்" என்று தேர்வு செய்த உடனே, நம்முடைய நிதி அமைச்சர் அண்ணன் தங்கம் தென்னரசு அவர்களுக்குத் தொலைபேசியில் அழைத்து, "இந்த மாதிரி நடத்த முடியுமா அண்ணே?" என்று கேட்டேன். உடனே அவர், "கண்டிப்பாக நடத்திவிடுவோம் தம்பி" என்றார். "நேரம் இருக்குமா அண்ணே, நிறைய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமே?" என்று கேட்டதற்கு, "அதெல்லாம் ஒன்றும் பிரச்சினை இல்லை தம்பி, நான் பார்த்துக்கொள்கிறேன். உங்கள் துணைச் செயலாளர்களை அனுப்பி வையுங்கள்" என்று சொன்னார். "நீங்கள் அனுப்பி வையுங்கள் தம்பி, எல்லாவற்றையும் நீங்கள் நினைத்ததை விட மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்துவிடுவோம்" என்று சொல்லி, கிட்டத்தட்ட 20-25 நாட்களில் இந்த ஏற்பாடுகளை எல்லாம் மிகச் சிறப்பாகச் செய்து, இவ்வளவு சிறப்பாக ஒரு சந்திப்பை நடத்திக் காட்ட முடியும் என்பதை நாம் மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறோம்.

700 பேருடைய முகம்

உண்மையாகவே இப்படிப்பட்ட செயல் வீரர்கள், அமைப்பாளர்கள், துணைச் செயலாளர்கள், துணை அமைப்பாளர்கள் எனக்குக் கிடைத்திருக்கிறார்கள் என்றால் உள்ளபடியே நான் மிகவும் பெருமையாக உணர்கிறேன். திருவண்ணாமலையில் நான் மேடைக்கு வரும்பொழுது கிட்டத்தட்ட 100 சதவீதம் அரங்கு நிறைந்திருந்தது. அதன் பிறகு மாலை ஐந்து மணி அளவில் வெயில் அதிகமானதால் கொஞ்சம் கூட்டம் குறைந்தது: ஒரு 70 சதவீதம் பேர்தான் இருந்தார்கள். ஆனால், விருதுநகரில் பார்த்தீர்கள் என்றால், தலைவர் பேசி முடிக்கின்ற வரைக்கும், தலைவர் கிளம்புகின்ற வரைக்கும் கூட்டம் கலையவே இல்லை. அந்த அளவுக்கு மிகுந்த எழுச்சியோடு இருந்தது. நான் மேடையில் அமர்ந்து அந்தப் பங்கெடுப்பைப் பார்க்கும்போது, எனக்கு அங்கேலட்சக்கணக்கில்கூடியிருந்தவர்களுடைய முகம் தெரியவில்லை: இங்கே வந்திருக்கிறீர்களே... உங்கள் 700 பேருடைய முகம்தான் அந்தப் பெருங்கூட்டத்தில் தெரிந்தது.

இரவு பகல் பாராமல் இதற்காக உழைத்திருக்கிறீர்கள். குறிப்பாகத் தெற்கு மண்டலத்துக்கு உட்பட்ட 20 மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆகியோரின் உழைப்பு உண்மையிலேயே போற்றுதலுக்குரியது, பாராட்டுதலுக்குரியது. அதற்காக வெறும் தெற்கு மண்டல அமைப்பாளர்கள் மட்டும்தான் உழைத்திருக்கிறார்கள் என்றால், நிச்சயமாகக் கிடையாது. மற்ற மண்டலத்தைச் சேர்ந்தவர்களும் "நாங்கள் இவர்களுக்கெல்லாம் சளைத்தவர்கள் கிடையாது" என்று போட்டி போட்டுக்கொண்டு, இது தெற்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு என்றாலும், இந்தச் சந்திப்பைத் தங்களுடைய மண்டலத்தில் நடப்பது போலவே கருதி முழு ஈடுபாட்டோடு உழைத்தார்கள். அதற்கான முடிவுதான் அந்தச் சந்திப்பின் மாபெரும் வெற்றி.

இந்தியாவுக்கே ஓர் உதாரணம்

இன்று பல இயக்கங்களில் இளைஞர் அணி என்று ஒன்று இருக்கிறதா என்றே தெரியாது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் அப்படி ஒரு அணி இருக்கிறதா என்று பலருக்குத் தெரியாது. ஆனால், நம்முடைய இளைஞர் அணி இன்று இந்தியாவுக்கே ஓர் உதாரணமாக, ஒரு முன்மாதிரியாக, ஒரு வழிகாட்டியாகப் பல பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது.

அதற்கு ஒரு சிறிய சான்றுதான் விருதுநகரில் நாம் நடத்திக் காட்டிய அந்தச் சந்திப்பு. கழகத்திற்கு வயது 76. 76-ஆவது ஆண்டில் தி.மு.க. நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. இன்றைக்கும் நாம் அதே இளமையோடும் துடிப்போடும் மக்கள் பணியாற்றி வருகிறோம் என்றால், இளைஞர்களை ஈர்ப்பதற்கு இந்த மாதிரி ஒரு நிர்வாகிகள் சந்திப்பு நடத்துவது மிக மிக அவசியம். அதுமட்டுமல்ல, மற்ற இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் வியந்து பார்க்கிறார்கள். இவ்வளவு கொள்கைப் பிடிப்போடு (Ideological Commitment) இவ்வளவு பெரிய இளைஞர் கூட்டத்தை நாம் திரட்ட முடியுமா? அவர்களை ஒரே இடத்தில் வரவழைத்து இவ்வளவு ஈடுபாட்டோடு வழிநடத்த முடியுமா? "கொள்கை இவ்வளவு முக்கியமா? தி.மு.க-வுக்கு மட்டும் இது எப்படிச் சாத்தியம்? தி.மு.க. இளைஞர் அணிக்கு மட்டும் இது எப்படிச் சாத்தியம்?" என்று மற்றவர்கள் வியக்கிறார்கள்.

வெற்றிக்குக் காரணம் நீங்கள்

நமக்குத் திரண்டிருக்கக்கூடிய அந்த எழுச்சியைப் பார்த்து அடிமைகளும் சரி, அடிமைகளுடைய உரிமையாளர்களும் சரி, இன்று விழித்துக்கொண்டிருக்கிறார்கள்: இதை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்று. அந்த முழு வெற்றிக்குக் காரணம் நீங்கள்தான். ஒவ்வொரு ஊருக்கும் சென்று கிளைக் கழக, பாக அளவிலான இளைஞர் அணி நிர்வாகிகளைச் சந்தித்து நீங்கள்தான் அழைப்பு கொடுத்தீர்கள்.

கழக இளைஞர் அணியின் நிகழ்ச்சியை உங்களுடைய வீட்டு நிகழ்ச்சி போல நினைத்து ஒவ்வொருவரும் இதற்காக உழைத்திருக்கிறீர்கள். அதனால்தான் கலைஞர் அவர்கள் நம் அத்தனை பேரையும் 'உடன்பிறப்பு' என்று சொன்னார். அந்தக் குடும்ப பந்தம், குடும்பப் பாசத்தை நம்முடைய சந்திப்புக்காக நீங்கள் ஒவ்வொருவரும் கொடுத்திருக்கிறீர்கள்.

சரி, நிர்வாகிகள் சந்திப்பு முடிந்துவிட்டது, கொஞ்ச நாள் ஓய்வு எடுக்கலாம் என்று பார்த்தால், அதற்கும் இங்கே வாய்ப்பு கிடையாது. அடுத்து நிறைய வேலைகள் இருக்கின்றன: தேர்தல் பிரச்சாரத்திற்கான வேலைகள் காத்திருக்கின்றன. ஒவ்வொரு ஊருக்கும், கிளைக்கும், பாகத்திற்கும் சென்று இளைஞர் அணி நிர்வாகிகளை நீங்கள் தொடர்ந்து சந்தித்துக்கொண்டே இருங்கள். அவர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்க வேண்டியது அவசியம்.

கழகச் செய்திகளை, தலைவருடைய அறிக்கைகளை அவர்களுடன் வாட்ஸ்அப் மூலமாகவோ, நேரடியாகப் பார்க்கும்போதோ தயவுசெய்து பகிர்ந்து கொள்ளுங்கள். இணையதளம், முகநூல் (Facebook), எக்ஸ் தளம், இன்ஸ்டாகிராம் என எல்லாவற்றிலும் அவர்கள் சுறுசுறுப்பாக இருப்பதற்கான தூண்டுதலை நாம் கொடுக்க வேண்டும்.

22–ஆம் தேதி கோவையில்...

புதிய நிர்வாகிகள் எல்லாம் கழக இளைஞர் அணியின் செயல்பாடுகளில் தொடர்ந்து ஈடுபடுங்கள். அடுத்து மேற்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பையும் நடத்த இருக்கிறோம். அதற்கும் நாம் இப்போதிருந்தே தயாராக வேண்டும். வருகின்ற 22-ஆம் தேதி கோவையில் மேற்கு மண்டலத்திற்கான சந்திப்பு நடக்க இருக்கிறது. 14 மாவட்டங்கள், 39 தொகுதிகளைச் சேர்ந்த கிட்டத்தட்ட 56,000 நிர்வாகிகளை வருகின்ற 22-ஆம் தேதி கோயம்புத்தூரில் சந்திக்க இருக்கிறேன்.

அதற்கு இப்போதிருந்தே நம்முடைய பணிகளை நாம் தொடங்க வேண்டும். 2024 நாடாளுமன்றத் தேர்தலின் போது இளைஞர் அணி சார்பாக, "இல்லந்தோறும் இளைஞர் அணி, களத்தில் இளைஞர் அணி" என்று சொல்லி உறுப்பினர்களைச் சேர்த்தோம்: தேர்தல் பிரச்சாரத்தைச் செய்தோம். அது தேர்தலின் வெற்றிக்கு மிகவும் உறுதுணையாக இருந்தது. அதே மாதிரி நாம் வருகின்ற சட்டமன்றத் தேர்தலுக்கும் இளைஞர் அணி சார்பாகப் பிரச்சாரத்தைத் தொடங்க வேண்டும். குறிப்பாகத் திண்ணைப் பிரச்சாரத்தை, தெருமுனைக் கூட்டங்களை நாம் நடத்த வேண்டும்.

எல்லாப் பணிகளையும் மாவட்டக் கழகச் செயலாளர்கள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் எனத் தாய்க் கழகத்துடன் இணைந்து, அவர்களுடைய ஆலோசனை பெற்று நாம் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய துணைச் செயலாளர்கள், மண்டலப் பொறுப்பாளர்களுடைய வழிகாட்டுதலின்படி உங்களுடைய பணிகளை நீங்கள் வகுத்துக்கொள்ளுங்கள். கடந்த 7 ஆண்டுகளாக நான் இளைஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்றது முதல் நாம் ஓடிக்கொண்டே இருக்கிறோம், உழைத்துக்கொண்டே இருக்கிறோம்.

உங்களில் ஒரு சிலருக்கு இந்த நினைப்பு வரலாம். "என்னடா நாம் உழைத்துக்கொண்டே இருக்கிறோமே, நம்முடைய உழைப்பை யாராவது பார்க்கிறார்களா, கவனிக்கிறார்களா?" என்று தோன்றும். நிச்சயம் அந்த நினைப்பு உங்களுக்கு வேண்டாம். உங்கள் எல்லாருடைய பணிகளையும் கழகத் தலைவர் அவர்கள் கவனித்துக்கொண்டே இருக்கிறார். உங்கள் பணிகளை மட்டும் இல்லை, என்னுடைய பணியையும் அவர் கவனித்துக்கொண்டிருக்கிறார். அவர் மட்டுமல்ல, நானும் உங்களின் பணிகளைத் தொடர்ந்து கவனித்துக்கொண்டே இருக்கிறேன்.

உங்களுக்கான அங்கீகாரம்

ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்த நிர்வாகி அதிகமாக உழைத்துக்கொண்டிருக்கிறார், சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார் என்று நான் தொடர்ந்து நம்முடைய 'அன்பகம்' குழு மூலமாகப் பின்தொடர்ந்து கொண்டிருக்கிறேன். நிச்சயம் உங்களின் உழைப்பு வீண் போகாது. உங்களுக்கான அங்கீகாரத்தைத் தலைவர் அவர்கள் நிச்சயம் தருவார்கள்: கண்டிப்பாக நான் அதைப் பெற்றுத் தருவேன் என்ற வாக்குறுதியை இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். உற்சாகமாக வேலை செய்யுங்கள், தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

நம்மிடம் கொள்கை இருக்கிறது, அரசின் திட்டங்கள் இருக்கின்றன, சாதனைகள் இருக்கின்றன. எந்தக் கொள்கையும் இல்லாமல், எந்த லட்சியமும் இல்லாமல் வீட்டுக்குள்ளே படுத்துத் தூங்குகின்ற கூட்டம் நம்முடைய கூட்டம் கிடையாது. என்றைக்குமே மக்களோடு நின்று, மக்களோடு பணியாற்றுகின்ற ஒரு குழு நாம் என்பதை மெய்ப்பிக்க வேண்டிய நேரம் இந்தச் சட்டமன்றத் தேர்தல். எப்படியாவது இன்று தமிழ்நாட்டைப் பிடித்துவிட வேண்டும் என்று பாசிசக் கூட்டமும், அடிமைக் கூட்டமும் பல்வேறு முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

நிதி உரிமையைப் பறிக்கிறார்கள்; மொழி உரிமை, கல்வி உரிமை என்று எப்படியாவது தமிழ்நாட்டுக்கு ஏதாவது ஓர் இடையூறு கொடுக்க வேண்டும் என்று, நம்முடைய அரசுக்கு முட்டுக்கட்டை போட வேண்டும் என்று அந்தப் பாசிசக் கூட்டம் முயற்சி செய்து கொண்டே இருக்கிறது. ஒன்றிய பா.ஜ.க அரசு தொடர்ந்து நம்முடைய மாநில உரிமைகளைப் பறித்துக்கொண்டே இருக்கிறது. சமீபத்திய ஒன்றிய பட்ஜெட்டை எடுத்துக்கொள்ளுங்கள், தமிழ்நாட்டிற்கென்று ஒரு திட்டத்தைக் கூட அவர்கள் ஒதுக்கவில்லை.

இன்னொரு சிறந்த உதாரணம், பட்ஜெட்டை ஒன்றிய அமைச்சர் படிக்கத் தொடங்கி முடிப்பதற்கு முன்னாலேயே இங்கே எதிர்க்கட்சித் தலைவர் பாராட்டுகிறார் – "மிகச் சிறந்த பட்ஜெட்" என்று! அப்படிப்பட்ட ஒரு நிலைமையை இன்று தமிழ்நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆனால், நம்முடைய அரசு எவ்வளவு நிதி நெருக்கடி வந்தாலும், நம்முடைய தலைவர் பல்வேறு திட்டங்களைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்.

மிகப்பெரிய வரவேற்பு

விடியல் பயணத் திட்டம், மகளிருக்கான கட்டணமில்லாப் பேருந்துத் திட்டம், காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம் என அடுக்கிக்கொண்டே போகலாம். இப்பொழுது சமீபத்தில் பார்த்தீர்கள் என்றால், 10 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மடிக்கணினி கொடுத்திருக்கிறார்கள்.

இன்று எல்லாவற்றுக்கும் மேலாகக் 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்'. இன்று இந்தத் திட்டத்திற்கு மிகப் பெரிய வரவேற்பு கிடைத்திருக்கிறது. சங்கீகளும், அடிமைகளும் எப்படியாவது அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று பார்த்தார்கள். இன்று மதுரைக்கு வந்த உடனே ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காகப் போயிருந்தேன். அங்கே பார்த்தீர்கள் என்றால், மகளிர் என் வண்டியை நிறுத்தி, "தலைவருக்கு நன்றி சொல்லுங்கள், முதலமைச்சருக்கு நன்றி சொல்லுங்கள், 5,000 ரூபாய் வந்துவிட்டது" என்று மிகுந்த எழுச்சியோடு நன்றி சொன்னார்கள்.

திராவிட மாடல் 2,0 ஆட்சி

இந்த இடத்தில் நிர்வாகிகள் நாம் ஒரு விஷயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். "ஏதோ தேர்தலுக்காக முதலமைச்சர் கொடுத்திருக்கிறார்" என்று எதிர்க்கட்சிகள் வதந்திகளைக் கிளப்பி விடுகிறார்கள். அதாவது பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மூன்று மாதங்களுக்குச் சேர்த்து 3,000 ரூபாயும், கோடைக்காலச் செலவு என்று சிறப்புத் தொகையாக 2,000 ரூபாயும் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். 1 கோடியே 30 லட்சம் மகளிருக்கு இது வழங்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்த பிறகு, 1,000 ரூபாயை உயர்த்தி 2,000 ரூபாய் தருவோம் என்ற வாக்குறுதியையும் நம்முடைய தலைவர் கொடுத்திருக்கிறார்.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அவர்கள், "நான் 1,500 ரூபாய் உயர்த்தித் தருவேன்" என்று சொல்லியிருந்தார். மக்கள் அதை நம்பவில்லை. ஆனால், நம்முடைய தலைவர் சொன்ன உடனே நம்புகிறார்கள். இப்போது பார்த்தீர்கள் என்றால் 5,000 ரூபாய் கொடுத்துவிட்டார்கள். ஏற்கனவே வாக்குறுதி அளித்த 1,000 ரூபாயைக் கொடுத்த தலைவர், நிச்சயம் 2,000 ரூபாயும் கொடுப்பார் என்று மகளிர் நம்புகிறார்கள்.

இதனால் எதிர்க்கட்சியும், பா.ஜ.க-வும் இன்று மிகப்பெரிய ஒரு வயிற்றெரிச்சலில் இருக்கிறார்கள். என்ன செய்வதென்று தெரியாமல் வதந்திகளைக் கிளப்புகிறார்கள். ஏன் இந்தத் தொகையைத் தலைவர் இப்போதே கொடுத்தார் என்றால், சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் இரண்டு மாதங்கள் இருக்கும் நிலையில், இந்தத் திட்டத்தை நீதிமன்றத்திற்குச் சென்று முடக்க அவர்கள் முயற்சி செய்தார்கள்.

சட்டமன்றத் தேர்தல்

பா.ஜ.க-வைச் சேர்ந்த அஸ்வினி குமார் உபாத்யாய் என்ற வழக்கறிஞர், உச்ச நீதிமன்றத்தில் ஒரு பொதுநல வழக்குத் தொடர்ந்தார். "தேர்தலுக்கு முன்னால் பொதுமக்களுக்கு எந்தத் திட்டங்களையும் கொடுக்கக்கூடாது, செயல்படுத்தக் கூடாது" என்று அவர் மனு போட்டிருக்கிறார். இப்போது தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம் உள்ளிட்ட ஐந்து மாநிலங்களுக்குச் சட்டமன்றத் தேர்தல் நடக்கப் போகிறது. இந்த மாநிலங்களில் ஆளும் எதிர்க்கட்சிகளை எப்படியாவது முடக்க வேண்டும் என்பதுதான் பா.ஜ.க-வின் எண்ணம்.

அந்த மனு பிப்ரவரி 5-ஆம் தேதி உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. மார்ச் மாதம் இதனை விசாரிப்பதாக நீதிமன்றம் உத்தரவிட்டது. அந்த மனுவின் மீது உச்ச நீதிமன்றம் ஏதாவது இடைக்கால உத்தரவு போட்டுவிட்டால், தேர்தல் முடிந்து அடுத்த ஆட்சி வருகின்ற வரைக்கும் மகளிர் உரிமைத் தொகையை மூன்று மாதங்களுக்குக் கொடுக்க முடியாது.

இதை அறிந்த நம்முடைய தலைவர் அவர்கள், "அடுத்த மூன்று மாதத்திற்கு இப்பொழுதே கொடுத்துவிடுவோம், இனி மேல் யார் என்ன சொல்ல முடியும்?" என்று திட்டமிட்டார். பொதுவாக அரசு ஒரு திட்டத்தை அறிவித்துவிட்டுப் பிறகு கொடுப்பார்கள். தலைவர் அதற்கான வாய்ப்பையும் கொடுக்கவில்லை. "நீ நீதிமன்றத்திற்குப் போனால் என்ன? நான் ஏற்கனவே கொடுத்துவிட்டேன் பார்" என்று சொல்லி, காலையில் 6 மணிக்கெல்லாம் தொகையைச் செலுத்த உத்தரவிட்டார்.

சமீபத்தில் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ளாட்சித் தேர்தல் நடந்தபோது, இதே மாதிரி நீதிமன்றத்திற்குச் சென்று ஒரு திட்டத்தைப் பா.ஜ.க முடக்கியது. இதையெல்லாம் அறிந்த நம்முடைய தலைவர், பா.ஜ.க மற்றும் அ.தி.மு.க-வின் சதித் திட்டத்தை முறியடித்திருக்கிறார். பாசிச சக்திகளுக்கும், அடிமைக் கூட்டத்திற்கும் இது மிகப்பெரிய அதிர்ச்சி. ஆனால், தமிழ்நாட்டு மகளிருக்கு மிகப்பெரிய ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் முதலமைச்சர் கொடுத்திருக்கிறார்.

இந்த இரண்டு மாதத்தில் மட்டும் மகளிருக்குக் கிட்டத்தட்ட 9,000 ரூபாய் உதவித் தொகையாகக் கிடைத்திருக்கிறது (சிறப்புத் தொகை 5,000 + பொங்கல் 3,000 + உரிமைத் தொகை 1,000). இதையெல்லாம் மக்களிடம் நம் இளைஞர் அணி கொண்டு சேர்க்க வேண்டும்.

தலைவர் சொன்னது போல, 2026 சட்டமன்றத் தேர்தலில் 200-க்கும் அதிகமான தொகுதிகளில் நாம் வெற்றி பெற வேண்டும். அதற்கு இளைஞர் அணி தம்பிமார்கள் நாம் களத்தில் நின்றாக வேண்டும். அதற்கு ஏற்ற மாதிரி உங்களின் பணிகளை அமைத்துக்கொள்ளுங்கள் என்று உங்கள் சகோதரனாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கொள்கை – லட்சியம்

விருதுநகர் சந்திப்பில் தலைவர் பேசும்போது, "இளைஞர் அணி என்றால் பிரம்மாண்டம்" என்று சொன்னார். அந்தப் பிரம்மாண்டம் என்பது இருக்கைகளின் எண்ணிக்கையையோ, அலங்காரங்களையோ குறித்தது அல்ல: அங்கே வந்திருந்த இளைஞர் அணி தம்பிமார்களுடைய எழுச்சியும் கொள்கை லட்சியமும்தான் அந்தப் பிரம்மாண்டம். நாம் எளிமையில் பிரம்மாண்டமாக இருக்க வேண்டும். கொள்கையில் உறுதியாக இருந்து, தலைவர் சொன்னது போல நம்முடைய பிரம்மாண்டத்தை நிரூபிப்போம். இன்று இந்த 20 மாவட்டங்களைச் சேர்ந்த அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களோடு புகைப்படம் எடுத்துக்கொண்டு நினைவுப் பரிசுகளை வழங்குகின்றோம். அடுத்தடுத்த மண்டலச் சந்திப்புகளிலும் இது தொடரும்.

இங்கே அனைவருக்கும் இரவு உணவு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அனைவரும் சாப்பிட்டுவிட்டுப் பத்திரமாக ஊர் போய்ச் சேர வேண்டும். அடுத்தடுத்த சந்திப்புகளில் உங்களைச் சந்திக்கிறேன். இந்த வெற்றியின் பின்னணியில் இருக்கும் உங்கள் அனைவருக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

தூத்துக்குடி மாவட்டம் – விளாத்திகுளம் வட்டம் – வைப்பார்- –1 கிராமம்

கிழக்கு கடற்கரை சாலையில் விபத்து - 5 பேர் உயிரிழப்பு!

உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு நிதியுதவி - முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, பிப்.16-

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், வைப்பார் -1 கிராமம், கிழக்கு கடற்கரை சாலையில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த ஐந்து நபர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் தெரிவித்து நிதியுதவி அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், வைப்பார்1 கிராமம், கிழக்கு கடற்கரை சாலையில் இன்று (15.02.2026) மாலை சுமார் 5.00 மணியளவில், தூத்துக்குடி மாவட்டம், பல்லாக்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு.குருசாமி (வயது 40), த/பெ. ஆண்டி என்பவர் தனது உறவினர்கள் 5 நபர்களுடன் இருசக்கர வானத்தில் பல்லாக்குளம் கிராமத்திற்கு சென்றுகொண்டிருந்தபோது, இராமநாதபுரம், சாயல்குடி கிராமத்திலிருந்து தூத்துக்குடி நோக்கி சென்று கொண்டிருந்த ரூரிஸ்ட் வாகனமும் மேற்படி இருசக்கர வாகனமும் எதிர்பாராதவிதமாக நேருக்குநேர் மோதிக் கொண்ட விபத்தில் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்த குருசாமி, திருமதி.மேரி (வயது 52) க/பெ.சன்னாசி, திருமதி. முத்துலட்சுமி (வயது 48) க/பெ.தங்கவேல், செல்வன். முகில் அரசன் (வயது 5) த/பெ.முனியசாமி, செல்வன். சுமித்ரன் (வயது 3) த/பெ. முனியசாமி ஆகிய ஐந்து நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த ஐந்து நபர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அவ்வறிவிப்பில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர் இராம வீரப்பன் மூத்த மகன்

வீ.தமிழ் அழகன் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப்.16

முன்னாள் அமைச்சர் இராம. வீரப்பன் அவர்களின் மூத்த மகன் வீ. தமிழ் அழகன் அவர்களின் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார்.

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

அரசியலிலும் கலைத்துறையிலும் திறம்படச் செயலாற்றி அனைவரது நன்பதிப்பையும் பெற்றிருந்த முன்னாள் அமைச்சர். இராம. வீரப்பன் அவர்களது மூத்த மகன் வீ. தமிழ் அழகன் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.